Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, JUNE 23 2025

திங்கட்கிழமை 23, ஜூன் 2025 | ஒளி: 10 கதிர் 267 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

## ‘அணையா விளக்குக்கு’ அணிதிரள அழைப்பு

நிதர்சன் வினோத்

யாழ்ப்பாணம் செம்மணி பகுதியில் நடைபெறவுள்ள ‘அணையா விளக்கு’ போராட்டத்திற்குத் தமிழர் தேசமாக அனைவரும் அணித் திரள வேண்டும் என யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.

யாழ்ப்பாணம் செம்மணி மனிதப் புதைகுழியில் புதைக்கப்பட்டவர்களுக்கு சர்வதேச நீதி கோரியும், சர்வதேசக் கண்காணிப்புடன் மனிதப் புதைகுழி அகழ்வை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தியும் இந்த போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.




‘மக்கள் செயல்’ என்ற தன்னார்வ இளையோர் அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த போராட்டம் திங்கட்கிழமை (23) முதல் 25ஆம் திகதி புதன்கிழமை வரையில் செம்மணி வளைவுப் பகுதியில் முன்னெடுக்கப்படவுள்ளது.

‘அணையா விளக்கு’ என்ற பெயருடன் முன்னெடுக்கப்படவுள்ள போராட்டம் தொடர்பாகக் கருத்து தெரிவித்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் லிகிதர்

சிவில் சமூக அமைப்புகள் இணைந்து அணையா விளக்கு என்ற போராட்டத்தை மனித புதைகுழிக்கு சர்வதேச நீதி வேண்டி போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக அறிய முடிகிறது. நாங்கள் ஒரு பங்காளராகப் பங்கேற்று முற்று முழுதாக வடக்கு கிழக்கில் மிகப்பெரிய அழைப்பை முன்னெடுக்கின்றோம்.

தொடர்ச்சி P2

## இன்று வருகிறார் வோல்கர் டேர்க்

அரசாங்கத்தின் அழைப்பின்பேரில், உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நாளைய தினம் நாட்டுக்கு வருகை தரவிருக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க், திங்கட் கிழமை(23) அன்று இலங்கைக்கு விஜயம் செய்யவிருக்கிறார்.



அவர், ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய உள்ளிட்ட அரசாங்கத்தின் உயர்மட்டப் பிரதிநிதிகள், ஏனைய அரசியல் கட்சிகளின் தலைவர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், பாதிக்கப்பட்ட தரப்பினர், மகாநாயக்க தேரர்கள் உள்ளடங்கலாகப் பல்வேறு தரப்பினரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கவுள்ளார்.

# “அமைதிக்கு ஒரு வாய்ப்பு கொடுங்கள்”

## இஸ்ரேல், ஈரானுக்கு ஐ.நா. வலியுறுத்தல்



இஸ்ரேல் - ஈரான் இடையேயான போரில் அமைதிக்கு ஒரு வாய்ப்பு கொடுங்கள் என ஐ.நா. பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ் கூறியுள்ளார்.

இஸ்ரேல் - ஈரான் இடையேயான போர் நாளுக்கு நாள் தீவிரமடைந்து வருகிறது. போரை நிறுத்த வேண்டும் என்று இஸ்ரேல் மற்றும் ஈரானின் ஆதரவு நாடுகள் வலியுறுத்தி வருகின்றன. இந்நிலையில், ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்தில் இஸ்ரேல் - ஈரான் போர் தொடர்பாக ஐ.நா. பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ் பேசுகையில்,

“இரு நாடுகளுக்கு இடையேயான போர் என்பது யாராலும் கட்டுப்படுத்த முடியாத தீயைப் பற்ற வைக்கும். அதை நாம் பரவ விடக் கூடாது.

தொடர்ச்சி P2

## “அமெரிக்க கப்பல்களை தாக்குவோம்”

### ஈரான் எச்சரிக்கை

அமெரிக்கா நடத்திய தாக்குதலுக்குத் தாமதமின்றி, பதில் தாக்குதல் நடத்தப்படும் என ஈரான் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஈரான் அணு ஆயுத தயாரிப்பில் ஈடுபட்டுள்ளதாகக் கூறி அந்நாட்டின் மீது கடந்த 13ஆம் திகதி முதல் இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது. ஈரானின் ஃபோர்டோ பகுதியில் சாதாரண ஏவுகணைகள் ஊடுருவ முடியாத வகையில்,



தொடர்ச்சி P2



## ஊழியர்களின் உணவுக் கட்டணங்கள் குறைப்பு

பாராளுமன்ற ஊழியர்களின் கோரிக்கைகளைத் தொடர்ந்து, சபாநாயகர் தலைமையிலான பாராளுமன்றக் குழு, பாராளுமன்ற ஊழியர்களுக்கு விதிக்கப்படும் உணவுக் கட்டணங்களை திருத்தியமைக்க முடிவு செய்துள்ளது.

பாராளுமன்றத்தில் (20) நடைபெற்ற குழுக் கூட்டத்தின் போது, இந்த திருத்தம் இறுதி செய்யப்பட்டது. 2025 ஜூலை முதல் அமலுக்கு வரும் புதிய முடிவின்படி, நிர்வாக நிலை அதிகாரிகளுக்கு மாதத்திற்கு ரூ. 3,000 வசூலிக்கப்படும். (முன்பு ரூ.4,000) வசூலிக்கப்பட்டது.


தொடர்ச்சி P2

## ஈன்ற சிசுவை வடிகானில் வீசிய இளம் தாய்

ரஸீன் ரஸ்மின்

புத்தளம் தள வைத்தியசாலையில் பெண்கள் தங்கியிருந்து சிகிச்சை பெறும் வார்ட்டின் குளியலறையில் உள்ள வடிகானில் இருந்து உயிரிழந்த நிலையில் சிசுவின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், இந்த சம்பவத்துடன் தொடர்புடையவர் என சந்தேகிக்கப்படும் புத்தளம் தள வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வந்த யுவதி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் புத்தளம் தலைமையக பொலிஸார் வெள்ளிக்கிழமை(20) அன்று குறிப்பிட்டுள்ளனர்.



இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபரான இளம் யுவதி, புத்தளத்தில் உள்ள ஒரு மசாஜ் நிலையம் ஒன்றில் பணிபுரிந்த கற்பிட்டி, ஆனவாசல் பகுதியைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ச்சி P2



### ‘ஒரு பூமிக்கான யோகா, ஓர் ஆரோக்கியம்’

கொழும்பில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயம் மற்றும் அதன் கலாசாரப் பிரிவான சுவாமி விவேகானந்தா கலாசார மையம் (SVCC) ஆகியவற்றால், சுகாதார அமைச்சகம் மற்றும் பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளாட்சி அமைச்சகத்துடன் இணைந்து, 2025 ஜூன் 21 அன்று 11ஆவது சர்வதேச யோகா தினம் ‘ஒரு பூமிக்கான யோகா, ஒரு ஆரோக்கியம்’ எனும் கருப்பொருளில் சுதந்திர சதுக்கத்தில் கொண்டாடப்பட்டது.



## மறுத்தார் மைத்திரி

அனுராதபுரத்தி ல் உள்ள எப்பாவல பல்நோக்கு கூட்டுறவு சங்கத்தின் கீழ் ஒரு கட்டிடத் திட்டத்தி ற்காக ஜனாதிபதி நிதியிலிருந்து ரூ.27.5 மில்லியன் பயன்படுத்தப்பட்டமை தொடர்பான குற்றச்சாட்டுகளை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மறுத்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

நிதி முறைகேடு தொடர்பாக தம்மை உட்படுத்த முயற்சிக்கும் ஊடக அறிக்கைகள் தவறானவை மற்றும் தவறாக வழிநடத்தப்படுகின்றன என்றும், இந்தக் கூற்றுக்கள் தவறான மற்றும் திரிபுபடுத்தப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை என்றும் மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார்.



தொடர்ச்சி P2

## ஏனைய–அரசாங்கத்தை போல

## ஏமாற்றாமல் காணி உரிமையை வழங்கவும்

### ஹட்டன் ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தல்

எஸ்.சதீஸ்

ஏனைய அரசாங்கங்களைப் போல, ஏமாற்றாமல் மலையக மக்களுக்கு காணி உரிமையை ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க மற்றும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய ஆகியோர் காணி உரிமையைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என மலையக மக்களின் காணி உரிமைக்கான இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

தொடர்ச்சி P2



## பன்றிக் காய்ச்சல் எச்சரிக்கை விடுப்பு

இலங்கையில் உள்ள அனைத்து பிரதேச செயலகப் பிரிவுகளையும் ஆப்பிரிக்க பன்றிக் காய்ச்சல் (ASF) பாதிக்கப்பட்ட அல்லது ஆபத்தான பகுதிகளாக அறிவிக்கும் ஒரு வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார இயக்குநர் ஜெனரல் திருமதி ஹேமாலி கொத்தலாவாலா வெளியிட்ட வர்த்தமானி ஜூன் 13 முதல் மூன்று மாதங்களுக்கு அமலில் இருக்கும். இந்த அறிவிப்பு பன்றிகளையும் ஆபத்தான விலங்குகளாகக் குறிப்பிடுகிறது.

தொடர்ச்சி P2

## அமைதி ஏற்படாவிட்டால்

## “மீண்டும் தாக்குவோம்”

ஈரானின் மூன்று அணுசக்தி தளங்கள் மீது அமெரிக்க இராணுவம் தாக்குதல் நடத்தியதாக அறிவித்த அமெரிக்க ஜனாதிபதி டொனால் ட்ரம்ப், தாக்குதல்களுக்குப் பிறகும் அமைதி ஏற்படாவிட்டால் மிகப் பெரிய தாக்குதல் நடத்தப்படும் என்றும் எச்சரித்துள்ளார்.

அமெரிக்காவின் தாக்குதல் குறித்து செய்தியாளர்களிடம் பேசிய ட்ரம்ப், “இந்த தாக்குதல் அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் உலகிற்கு ஒரு வரலாற்றுத் தருணம். அமெரிக்கத் தாக்குதல்களில் ஈரானின் முக்கிய அணுசக்தி தளங்கள் முற்றிலும் முழுமையாகவும் அழிக்கப்பட்டன.

ஈரானை தாக்க இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகுவுடன் ஒரு குழுவாக செயற்பட்டோம். ஈரானின் அணு சக்தி செறிவூட்டல் திறனை நிறுத்தவும்,



அணுசக்தி அச்சுறுத்தலை நிறுத்தவும் இந்த தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

ஈரான் இப்போது இந்தப் போரை முடிவுக்குக் கொண்டுவர ஒப்புக்கொள்ள வேண்டும். எங்களின் தாக்குதலுக்குப் பதிலடி கொடுக்க நினைத்தால் கடும் விளைவுகளைச் சந்திக்க நேரிடும்.

தொடர்ச்சி P2

## சுற்றுலா பஸ் விபத்தில் மூவர் பலி; 32 பேர் படுகாயம்

பதுளை, துன்ஹிந்த பகுதியில் சுற்றுலா பஸ் ஒன்று சனிக்கிழமை (22) அன்று விபத்துக்குள்ளானதில் மூவர் பலியாகியுள்ளதுடன், 32 பேர் காயமடைந்துள்ளனர்.

அனுராதபுரம், தம்புதுதேகம பிரதேசத்தில் இருந்து பதுளைப் பகுதிக்குச் சுற்றுலாப் பயணிகளை ஏற்றி வந்த தனியார் பஸ் பதுளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மஹியங்கனை வீதி,

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

# “அமைதிக்கு ஒரு வாய்ப்பு கொடுங்கள்”

அமைதியை ஏற்படுத்த ஒரு வாய்ப்பு கொடுங்கள். போர் பதட்டத்தை உடனடியாக குறைக்க வேண்டும்.

போரை நிறுத்துவது அந்தந்த நாடுகளின் தலைவிதியை மட்டுமல்ல, ஒட்டுமொத்த எதிர்காலத்தின் தலைவிதியை மாற்ற உதவும். போர் மேலும் மேலும் அதிகமாக நாம் அனுமதிக்கக் கூடாது. இந்த மோதல் கணிக்க முடியாததாக உள்ளது.

ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலுக்குள் ஒற்றுமை மற்றும் ஐ.நா. சாசனத்தை பின்பற்ற வேண்டும்” என்று தெரிவித்தார்.

முன்னதாக நடைபெற்ற ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்தில் இஸ்ரேல், ஈரான் நாட்டின் பிரதிநிதிகள் தங்களுடைய குற்றச்சாட்டுகளை தெரிவித்தனர்.

ஈரான் மீதான தாக்குதல்களை நிறுத்த மாட்டோம் என்று இஸ்ரேல் கூறிய நிலையில், குற்றங்களுக்கு இஸ்ரேல் பொறுப்பேற்றால் அணுசக்தி பேச்சுவார்த்தைக்கு ஒத்துழைப்போம் என ஈரான் கூறியுள்ளது.

ஈரான் அணுசக்தி திட்டங்களை நிரந்தரமாக முடக்கும் நோக்கில் ‘ஆப்பரேஷன் ரைசிங் லயன்’ என்ற பெயரில் இஸ்ரேல் கடந்த வாரம் அதிகாலை தாக்குதல் நடவடிக்கை மேற்கொண்டது.

இதில் ஈரானின் நாட்டின் முக்கியத்துவம் வாய்ந்த அணுசக்தி மையங்கள், இராணுவ நிலைகள் சேதமடைந்தன. ஈரானின் முப்படை தளபதி, சக்திவாய்ந்த துணை இராணுவப் படையான இஸ்லாமிய புரட்சிகர காவல் படையின் தலைமை தளபதி உள்ளிட்ட முக்கிய பாதுகாப்பு அதிகாரிகள் குறிவைத்து படுகொலை செய்யப்பட்டனர்.

அதற்குப் பதிலடியாக, ‘ஆப்பரேஷன் ட்ரூ ப்ராமிஸ்-3’ என்ற பெயரில் ஈரானும் இஸ்ரேல் மீது சரமாரியாக ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தியது. இதில் பெரும்பாலானவை இஸ்ரேல் வான்பாதுகாப்பு ஏவுகணைகளால் இடைமறித்து அழிக்கப்பட்டாலும், எஞ்சிய ஏவுகணைகள் இலக்குகளைத் தாக்கின. தற்போது இரு நாடுகளும் கடுமையான தாக்குதலை மேற்கொண்டு வருகின்றன.

## பன்றிக் காய்ச்சல் எச்சரிக்கை விடுப்பு

சமீபத்திய மாதங்களில் நாடு முழுவதும் பல பகுதிகளில் பன்றிக் காய்ச்சல் தொடர்ந்து பரவி வருவதைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது, மேலும் தொற்றுநோய்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் குறித்து அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

வர்த்தமானியின்படி, அதிக ஆபத்துள்ள பன்றிகள், பன்றி இறைச்சி மற்றும் பன்றி இறைச்சிப் பொருட்களைப் பாதிக்கப்பட்ட மற்றும் அதிக ஆபத்துள்ள

பகுதிகளுக்குள் அல்லது வெளியே கொண்டு செல்வது, அகற்றுவது அல்லது நகர்த்துவது கண்டிப்பாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

இறைச்சிக்காகப் பாதிக்கப்பட்ட விலங்குகளைப் படுகொலை செய்வது மற்றும் அதிக ஆபத்துள்ள விலங்குகளை உள்ளடக்கிய நேரடி விலங்கு சந்தைகளை வைத்திருப்பது ஆகியவை அந்தந்த பிரிவு கால்நடை மருத்துவரிடமிருந்து சிறப்பு அனுமதி பெறுதல் தடைசெய்யப்பட்டுள்ளன.

இலங்கையில் பன்றிகளின் எண்ணிக்கை மற்றும் பன்றி இறைச்சித் தொழிலுக்குக் கடுமையான அச்சுறுத்தலை ஏற்படுத்தும் கொடிய நோய் மேலும் பரவுவதைக் கட்டுப்படுத்துவதையும் தடுப்பதையும் இந்த நடவடிக்கைகள் நோக்கமாகக் கொண்டுள்ளன.

## ஈன்ற சிசுவை வடிகானில் வீசிய இளம் தாய்

கைது செய்யப்பட்ட சந்தேக நபரான குறித்த இளம் யுவதி, புத்தளம் தள வைத்தியசாலையில் சிகிச்சைக்காகத் தங்கியிருந்த போது, யாருக்கும் தெரியாது, இரகசியமாக சிசுவைப் பெற்றெடுத்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு பெற்றெடுத்த தனது குழந்தையைச் சந்தேக நபரான யுவதி, வைத்தியசாலையில் குளியலறை வடிகானில் கைவிட்டுச் சென்றதாகவும் புத்தளம் தலைமையக பொலிஸார் நடத்திய முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இருப்பினும், யுவதியின் நடத்தையில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக, பெண்கள் வார்டுக்குப் பொறுப்பான தாதியர் ஒருவர் குளியலறையை பரிசோதனை செய்துள்ளார்.

பின்னர், குளியலறையின் வடிகானை பரிசோதனை செய்த போது, குறித்த வடிகானுக்குள் வீசப்பட்ட நிலையில் சிசுவொன்று சிக்கி கிடப்பதை அவதானித்த உள்ளதுடன், சம்பவம் பற்றி வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகருக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

இதையடுத்து, சம்பவம் பற்றி பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டது, வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வந்த யுவதி ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபரான யுவதி பொலிஸ் பாதுகாப்பின் கீழ் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்த மரணம் தொடர்பில் புத்தளம் பதில் நீதவான் டி.எம்.இந்திக தென்னகோன், சம்பவ இடத்திற்குச் சென்று, நீதவான் விசாரணை முன்னெடுத்த பின்னர், குழந்தையின் சடலத்தைப் பிரேதப் பரிசோதனைக்காக அனுப்பி வைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் புத்தளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ‘அனையா விளக்குக்கு’ அணிதிரள அழைப்பு

எமது உறவுகளுக்காக உயிரிழந்த உறவுகளுக்காகவும் இழைக்கப்பட்ட அநீதிக்காகவும் தமிழ் தேசமாக திரண்டு போராட்டத்தில் ஒன்று சேர வேண்டும். இலங்கைக்கு தற்போது வருகை தரவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்ய உள்ளதாக அறிய முடிகிறது. மிக முக்கியமாக செம்மணி சித்துபாத்தி இந்து மயானத்தை மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ள பகுதியை மனிதப் புதைகுழி யாக அறிவிக்க வேண்டும்.

தொடர்ச்சியாக சர்வதேச நியமங்களுக்கு உட்பட்டு சர்வதேசத்தின் முற்றுமுழுதான தலையிட்டு அகழ்வாய்வை தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும். செப்டம்பர் மாதத்தில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் சபை கூட்டத்தில் ஈழத் தமிழர்களுடைய பிரச்சினையை திசை திருப்பவே மனித உரிமைகள் ஆணையாளரை இலங்கை அரசாங்கம் அழைத்துள்ளது.

வடக்கு கிழக்கு தமிழர்கள் இந்த சந்தர்ப்பத்தை சரியாக பயன்படுத்தி எங்கள் பிரச்சினைகளையும் மனித புதைகுழிகள் தொடர்ச்சியாக தோண்டப்படும் விடயங்களையும் வெளிப்படுத்த வேண்டும் என்றார்.



கொழும்பில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயம் மற்றும் அதன் கலாசாரப் பிரிவான சுவாமி விவேகானந்தா கலாசார மையம் (SVCC) ஆகியன இணைந்து, 2025 ஜூன் 21 அன்று 11ஆவது சர்வதேச யோகா தினம் "ஒரு பூமிக்கான யோகா, ஒரு ஆரோக்கியம், எனும் கருப்பொருளில் சுதந்திர சதுக்கத்தில், கொண்டாடப்பட்டது.

## “அமெரிக்க கப்பல்களை தாக்குவோம்”

மலையை குடைந்து அமைக்கப்பட்டுள்ள அணு உலை மீது தாக்குதல் நடத்தப் பங்கர் பஸ்டர் எனப்படும் அதிநவீன ஏவுகணையை வழங்கும்படி அமெரிக்காவிடம் இஸ்ரேல் கோரிக்கை விடுத்து வந்தது.

இந்த சூழலில், அமெரிக்க போர் விமானங்கள் ஈரானின் ஃபோர்டோ, நடான்ஸ் இஸ்பகான் ஆகிய மூன்று அணு உலைகள் மீது தாக்குதல் நடத்தியிருப்பதாக ஜனாதிபதி ட்ரம்ப் அறிவித்துள்ளார். குண்டுகளை வீசித் தாக்கும் அதிநவீன பி-2 போர் விமானங்கள் ஈரானின் மூன்று அணு உலைகள் மீது குண்டுகளை வீசியுள்ளன.. போர்டோ அணு உலை மீது சக்தி வாய்ந்த குண்டுகளை வீசியதாகவும், இதில், அந்த அணு உலை முற்றிலும் அழிக்கப்பட்டதாகவும் ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

## மறுத்தார் மைத்திரி

கடந்த 2019ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதவியில் இருந்தபோது, பல்நோக்கு மண்டபம் கட்டும் போது நிதி தவறாகப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறி, எஃப்.சி.ஐ.டியில் முறைப்பாடு அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

## “மீண்டும் தாக்குவோம்”

ஈரானுக்கு அமைதி அல்லது சோகம் ஆகியவற்றில் ஒன்றில் ஒரு தேர்வு மட்டுமே உள்ளது. மத்திய கிழக்குப் பகுதியைக் கொடுமைப்படுத்தும் நபராக ஈரான் உள்ளது. அந்த நாடு அமைதியை ஏற்படுத்தவில்லை என்றால் கூடுதல் தாக்குதல்கள் நடத்தப்படும்.

கடந்த 8 நாட்களில் நாம் கண்டதை விட மிகப்பெரிய அமைதி ஏற்படும் அல்லது ஈரானுக்கு மிகப்பெரிய சோகம் ஏற்படும். இன்னும் பல இலக்குகள் குறி வைக்கப்பட்டுள்ளன. அமைதி விரைவாக வரவில்லை என்றால் மற்ற இலக்குகளைத் துல்லியம், வேகம் மற்றும் திறமையுடன் நாங்கள் தாக்குவோம்" என்று கூறினார்.

## சுற்றுலா பஸ் விபத்தில் மூவர் பலி; 32 பேர் படுகாயம்

4ஆம் கட்டைப் பகுதியில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன்போது பஸ்ஸில் பயணித்த 35 பேர் காயங்களுக்குள்ளாகி பதுளை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அவர்களில் மூவர் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்துள்ளனர் என்று வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவுக்குப் பொறுப்பான வைத்தியர் பாலித்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்த விபத்து குறித்து பதுளை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## ஊழியர்களின் உணவுக் கட்டணங்கள் குறைப்பு

அதே நேரத்தில், நிர்வாகமற்ற ஊழியர்களுக்கு மாதத்திற்கு ரூ.2,000 வசூலிக்கப்படும். முன்னர் ரூ.2,500 வசூலிக்கப்பட்டது.

ஆரம்ப விலை நிர்ணய அமைப்பு மே 23 கூட்டத்தின் போது முடிவு செய்யப்பட்டு 2025 ஜூன் 1, முதல் அமுலுக்கு வர இருந்தது. இருப்பினும், ஊழியர்களின் மேல்முறையீடுகளின் அடிப்படையில் விலைகள் மறு மதிப்பீடு செய்யப்பட்டன.

பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓட்டுநர்கள், பொலிஸ் அதிகாரிகள், ஜனாதிபதி/பிரதமரின் பாதுகாப்புப் பணியாளர்கள் மற்றும் பாராளுமன்ற உணவகத்தைப் பயன்படுத்தும் ஊடகவியலாளர்களுக்கான உணவு விலைகள் மாறாமல் இருக்கும் என்றும் குழு முடிவு செய்தது. மேலும், நுவரெலியா விடுமுறை பங்களாவின் ஒரு பகுதி - தற்போது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. அதை எதிர்காலத்தில் பாராளுமன்ற ஊழியர்களின் பயன்பாட்டிற்காக ஒதுக்குவது குறித்தும் ஆராயப்பட்டது.

மாதிவெலவில் உள்ள உத்தியோகபூர்வ எம்.பி. வீட்டு வளாகத்தில் புதுப்பித்தல் தேவை என்பதையும் குழு மதிப்பாய்வு செய்தது, மேலும் பாராளுமன்ற அமர்வுகளின் போது எம்.பி.க்களின் ஓட்டுநர்களுக்கு தற்காலிக பகல்நேர ஓய்வுப் பகுதிகளை வழங்குவது குறித்தும் ஆராயப்பட்டுள்ளது.

## ஏமாற்றாமல் காணி உரிமையை வழங்கவும்

காணி தினத்தை முன்னிட்டு ஹட்டன்-மல்லியப்பு சந்தியில் சனிக்கிழமை (21) அன்று முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போதே இவ்வாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஹட்டன் மல்லியப்பு சந்தியில் இருந்து ஹட்டன் மணிக் கூட்டுக் கோபுரம் வரை பறை இசையுடன் பேரணியும் இடம்பெற்றுள்ளது.

இதன்போது, “200வருட காலமாக உழைத்து ஓடாய் தேய்ந்து போன மலையக மக்களுக்குக் காணி உரிமையை வழங்க எந்த அரசாங்கமும் இதுவரை முன்வரவில்லை”, “எமது மக்களுக்குக் காணி உரிமை கட்டாயம் வழங்கப்பட வேண்டும்”, “அவ்வாறு காணி வழங்கப்படும் போது, வாழ்வா தாரத்தோடு, வீடமைப்பு திட்டத்தை மேற்கொள்ள முடியும்”, “அப்போது தான் பெண்கள் சுதந்திரமாக வாழ்வதோடு, சிறுவர்களின் கல்வி நடவடிக்கையும் முறையாக முன்னெடுத்துச் செல்லக் கூடியதாக இருக்கும்”,” தற்போது உள்ள வீடமைப்பு திட்டங்கள் பொருத்தமற்றதாக காணப்படுகிறது”, ”தேசிய நீரோட்டத்தில் உள்ள சட்ட திட்டங்களின் அடிப்படையில் மலையக மக்களுக்கு 20 பேர்ச் காணியை இந்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பெற்றுக்கொடுக்கமென நம்புகிறோம்” என்று கோஷம் எழுப்பினர்.

மலையக மக்கள் தேசிய வருமானத்திற்காக இன்னமும் உழைத்து கொண்டு இருக்கிறார்கள். ஆனால், இந்த மக்களுக்கான காணி உரிமை

> மாரி மாரி அரசாங்கங்கள் வந்தாலும், எமக்கு வாக்குறுதி அழித்தாலும் நாங்கள் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்ட நிலையில் இருக்கிறோம், காணி உரிமையை பெற்றுக் கொடுப்பார்கள் என நம்பி வாக்களித்திருந்தோம்

உறுதிபடுத்தப்படவில்லை, மலையக மக்கள் நாட்டிற்கு உழைத்தது மாத்திரம் அல்லாமல், உண்மையான பிரஜைகளாக காணி உரிமை இல்லாததன் காரணமாக ஏற்றுக் கொள்ள முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள்.

மாரி மாரி ஆட்சி பீடத்திற்கு அரசாங்கங்கள் வந்தாலும் எமக்கு வாக்குறுதி அழித்தாலும் நாங்கள் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்ட நிலையில் இருக்கிறோம், காணி உரிமையை பெற்றுக் கொடுப்பார்கள் என நம்பி வாக்களித்திருந்தோம். ஆனால், தற்போது உள்ள செயற்பாடுகளை பார்க்கின்ற போது, இந்த காணி உரிமையை இவர்களும் பெற்று தருவார்களா என்ற சந்தேகம் எழுந்துள்ளது பாராளுமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் இந்த காணி தொடர்பான எவ்வித கலந்துரையாடல்களும் இடம் பெறவில்லை. என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் சுட்டிக் காட்டினார்

இதேவேளை,“ சொந்த நிலம் எமக்கு வேண்டும்”, ”உணவு உற்பத்திக்கான காணியினை வழங்கு”, ”காணி தினத்தை தேசிய தினமாக பிரகடனப் படுத்து” போன்ற சுலோகங்களையும் கோஷங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தமை குறிப்பிடத்தக்கது.

# காணிகளை விடுவிக்க கோரி ஆர்ப்பாட்டம்

நிதர்ஷன் வினோத்

யாழ். வலிகாமம் வடக்கில் உள்ள சுமார் 2,400 ஏக்கர் காணிகளை விடுவிக்கக் கோரி தொடர் ஆர்ப்பாட்டம், ஞாயிற்றுக்கிழமை (22) முதல் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் கடந்த 30 வருடங்களுக்கு மேலாக இருந்து வருகின்ற காணிகளை விடுவிக்கக் கோரிய அமைதி வழிப் ஆர்ப்பாட்டம் மயிலிட்டிச் சந்தியில் காணி உரிமையாளர்களால் பதாதைகளைத் தாங்கியவாறு இடம்பெற்று வருகிறது.



மக்களின் விவசாய நிலங்கள், குடியிருப்பு நிலங்கள் மற்றும் தொழில் நிலையங்கள் உள்ளிட்ட பல்வேறு காணிகள் யுத்தம் காரணமாக கடந்த 30 வருடங்களுக்கு மேலாக உயர் பாதுகாப்பு வலயமாக இருந்து வருகிறது ஆனால் யுத்தம் நிறைவுக்கு வந்த பின்னராக ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு ஆட்சியாளர்களும் மக்கள் காணிகளை படிப்படியாக சிறிய சிறிய துண்டுகளாக விடுவித்தனர்.

இருப்பினும், விடுவிக்கப்பட்ட காணிகளில் மக்கள் சுயமாக தமது வாழ்வாதாரத்தை முன்னெடுக்க முடியாத நிலையில் 2,400 ஏக்கர் காணிகளையும் முழுமையாக விடுவிப்பதே தமது வாழ்வியலை முன்னெடுக்க முடியும் என்ற நோக்கில் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

# வாகன விபத்தில் பெண் ஒருவர் மரணம்

ரஸீன் ரஸ்மின்

புத்தளம்-பாலாவி, கற்பிட்டி வீதியில் வெள்ளிக்கிழமை (20) இரவு இடம்பெற்ற வாகன விபத்தில் இளம் குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பாலாவி பகுதியைச் சேர்ந்த, ஒரு பிள்ளையின் தாயான அபூதாலிப் பாத்திமா ரிஸானா (வயது 40) எனும் பெண்ணே விபத்தில் இவ்வாறு உயிரிழந்துள்ளார். பாலாவி ஊடாக கற்பிட்டி நோக்கிச் சென்று கொண்டிருந்த எரிபொருள் பவுசர் ஒன்று, வீதியில் நடந்து சென்றுகொண்டிருந்த குறித்த பெண் மீது மோதியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் குறித்த பெண் வீதியில் இழுத்துச் செல்லப்பட்டதுடன், சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த பெண்ணின் ஜனாஸா புத்தளம் தள வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.



சம்பவம் தொடர்பில் புத்தளம் பகுதிக்குப் பொறுப்பான திடீர் மரண விசாரணை அதிகாரி தேசமான்ய பதுர்தீன் முஹம்மது ஹிஸாம், சம்பவ இடத்திலும், வைத்தியசாலையிலும் மரண விசாரணையை நடத்தியுள்ளார்.

இந்த விபத்துடன் தொடர்புடைய வாகன சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை புத்தளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பேச்சியம்பாள் ஆலய முத்துச் சப்பரத் திருவிழா

பு.கஜிந்தன்

அராலி மேற்கு ஸ்ரீ பேச்சியம்பாள் ஆலயத்தின் வருடாந்த அலங்கார வேள்வி உற்சவத்தின் 5ஆம் திருவிழாவான முத்துச் சப்பரத் திருவிழாவானது சனிக்கிழமை (21) அன்று சிறப்பாக நடைபெற்றது.

கருவறையில் வீற்றிருக்கும் பேச்சியம்பாளுக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. அதனைத் தொடர்ந்து, வசந்த மண்டப பூஜைகள் நடைபெற்றன. பின்னர் பேச்சியம்பாள் முத்துச் சப்பரத்தில்



எழுந்தருளியாக வீற்றிருந்து வீதியுலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். இதன்போது வாண வேடிக்கைகளும் இடம்பெற்றன. ஆலயக் கிரியைகளை துஷ்யந்தக் குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியார்கள் நடாத்தி வைத்தனர். பல பாகங்களிலும் இருந்து வருகை தந்த பக்தர்கள் அம்பாளை தரிசித்து இஷ்ட சித்திகளைப் பெற்றுச் சென்றனர். மேலும், கடந்த செவ்வாய்க்கிழமை (17) ஆரம்பமான திருவிழாவானது புதன்கிழமை (25) அன்று வேள்வி உற்சவத்துடன் நிறைவடையும் என்பது குறிப்பிடத்தக்கது.

# இலஞ்சம் பெற்ற சார்ஜன்ட்கள் கைது

பாறுக் ஷிஹான்

மணல் விற்பனை செய்யும் நபரிடம் இலஞ்சம் கோரிய குற்றச்சாட்டின் அடிப்படையில் இரு பொலிஸார் இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவால் கைது செய்யப்பட்டனர்.

'D.C.D.B' என அழைக்கப்படும் அம்பாறை மாவட்ட குற்றப்புலனாய்வு பிரிவில் இணைக்கப்பட்ட இரண்டு பொலிஸ் சார்ஜன்ட் அதிகாரிகள் தன்னிடம் 25,000 ரூபாய் பணத்தை இலஞ்சமாகக் கோருவதாக அம்பாறை மாவட்டம் திருக்கோவில் பொலிஸ் பிரிவில் மணல் விற்பனை மற்றும் போக்குவரத்து செயற்பாட்டில் ஈடுபடும் ஒருவர் கொழும்பிலுள்ள இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதனடிப்படையில், ஆணைக்குழு அதிகாரிகளின் ஆலோசனைக்கமைய சம்பவ தினமான சனிக்கிழமை(21) அம்பாறை மணிக்கூட்டுக் கோபுரம் அருகில் D.C.D.B என அழைக்கப்படும் அம்பாறை மாவட்ட குற்றப்புலனாய்வு பிரிவில் இணைக்கப்பட்ட இரண்டு பொலிஸ் சார்ஜன்ட் அதிகாரிகள் கூறியமைக்கு அமைவாக இலஞ்சப் பணத்தை மணல் விற்பனை செய்யும் நபர் வழங்கியுள்ளார்.

இதன்போது, அங்கு மாறு வேடத்தில் காத்திருந்த அதிகாரிகள் இரண்டு பொலிஸ் சார்ஜன்ட் அதிகாரிகளையும் கைது செய்துள்ளனர்.



> **தொழிலை எந்த பிரச்சினையும் இல்லாமல் தொடரவும் அந்த தொழில் தொடர்பாக சட்டப்பூர்வமாக செயல்படுவதை தவிர்க்கவும் சம்பந்தப்பட்ட இரண்டு அதிகாரிகளும் குறித்த நபரிடமிருந்து 25,000 ரூபாய் இலஞ்சம் கோரியிருந்தமை தெரியவந்துள்ளது**

மணல் விற்பனை மற்றும் போக்குவரத்து செயற்பாட்டில் ஈடுபடும் நபர் குறித்த தொழிலை எந்த பிரச்சினையும் இல்லாமல் தொடரவும் அந்த தொழில் தொடர்பாக சட்டப்பூர்வமாக செயல்படுவதை தவிர்க்கவும் சம்பந்தப்பட்ட இரண்டு அதிகாரிகளும் குறித்த நபரிடமிருந்து 25,000 ரூபாய் இலஞ்சம் கோரியிருந்தமை ஆரம்ப கட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

பின்னர் சம்மாந்துறை பொலிஸ் நிலையத்திற்கு இரு சந்தேக நபர்களும் அழைத்து வரப்பட்டு விசாரணைகளின் பின்னர் சம்மாந்துறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மின்னுயர்த்தி விபத்தில் இளைஞன் மரணம்

யாழ்ப்பாணத்தில் உள்ள விடுதியொன்றின் மின்னுயர்த்தியில் (lift) இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் சனிக்கிழமை (21) அன்று உயிரிழந்துள்ளார்.

புத்தூர் பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த இளைஞன் விடுதியின் மின்னுயர்த்தியில் செல்லும் போது தலையை வெளியே எடுத்ததால் தலை சுவருடன் மோதி குறித்த விபத்து சம்பவித்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

விபத்தில் படுகாயமடைந்த இளைஞன் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட போது சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இச்சம்பவம் குறித்து விசாரணைகளை யாழ். பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# கானகப் பாதையில் 10 ஆயிரம் பேர் பயணம்

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கதிர்காமம் ஆடிவேல் விழா உற்சவத்தையொட்டி கதிர்காமத்திற்கான காட்டுப்பாதை கடந்த வெள்ளிக்கிழமை (20) திறந்து வைக்கப்பட்டதும் முதல் நாளில் 10 ஆயிரத்து 450 அடியார்கள் காட்டுக்குள் பிரவேசித்தனர்.

இது கடந்த 2000ஆம் ஆண்டு கால வரலாற்றில் முதல் நாளில் சென்ற அதிகூடிய அடியார்களின் எண்ணிக்கையாகும்.

கடந்த காலங்களில் பொதுவாக சுமார் நான்காயிரம் அடியார்கள் முதல் நாளில் பிரவேசிப்பதுண்டு. கடந்த வருடம் மட்டும் அது 5,000 ஐ தாண்டியது. ஆனால், இவ்வருடம் அது வரலாற்றுப் பதிவாக பத்தாயிரத்தைத் தாண்டிய வரலாறாக மாறியுள்ளது.

அதுமட்டுமின்றி, சனிக்கிழமை (12) அன்று 5,456 அடியார்கள் காட்டுக்குள் பிரவேசித்ததுடன், ஞாயிற்றுக்கிழமை (23) சுமார் 4,000 பேரளவில் பிரவேசித்தனர்.

இம்முறை சுமார் 50 ஆயிரம் பேர் வரை பயணிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

– வி.ரி.சகாதேவராஜா











# மூன்றாம் உலகப் போர் மூண்டால் பிச்சையெடுக்கும் நிலை உருவாகும்

ஈரான் மீது அமெரிக்கத் தாக்குதல் நடத்தியுள்ள நிலையில், மூன்றாம் உலகப் போருக்கான தீக்குச்சி கொளுத்தப்பட்டுள்ளது என்றே கூறவேண்டும். இதனால், இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையிலான போர் மிக வேகமாகப் பரவ வாய்ப்புள்ளது. ஹமாஸ் ஏற்கனவே ஈரானுக்கு ஆதரவைத் தெரிவித்துள்ளது. இதற்கிடையில், ஏமனில் உள்ள ஹவுத்திகளும் ஈரானை ஆதரிப்பதாக உறுதியளித்துள்ளன.

ஈரான் மீது போர் தொடுக்கப்படுமாயின் நாங்களும் இறங்குவோமென சீனாவும் ரஷ்யாவும் ஏற்கெனவே அறிவித்துள்ளன. பாகிஸ்தான் ஈரானுக்கு ஆதரவாக குரல்கொடுத்துள்ளது. எனினும், இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் போர் ஏற்படுவதை தடுத்த அமெரிக்காவின் ஜனாதிபதி டொனால் ட்ரம்புக்கு சமாதானத்துக்கான நோபல் பரிசை வழங்கவேண்டுமென வலியுறுத்தியும் உள்ளது.

மூன்றாம் உலகப் போர் தொடங்கினால். எரிபொருட்களின் விலைகள் கிடுகிடுவென அதிகரிக்கும். உணவுப் பொருட்களின் விலைகள் எகிறும். சில நாடுகள் பட்டினி சாவை எதிர்நோக்கவேண்டிய நிலைமை ஏற்படும். வேலைவாய்ப்புகள் குறையும். போதியளவான வருமானத்தை எந்தத் துறையில் இருந்தும் எதிர்பார்க்கமுடியாது. ஏற்றுமதி வருமான குறையும். நாம் உணவுக்காகப் பிச்சை எடுக்க வேண்டியிருக்கும்.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் ஈரானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்த எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது. முதலில் அவர் தனது நாட்டிற்கும் உக்ரைனுக்கும் இடையிலான போரை நிறுத்த வேண்டும். அப்படி இல்லாவிட்டாலும், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு யார் சொல்வதையும் கேட்பவர் அல்ல. டொனால்ட் ட்ரம்ப் சொல்வதை அவர் கேட்பதில்லை.

மூன்றாம் உலகப் போர் சூடுபிடித்தால் முதலில் எரிபொருட்களின் விலையே அதிகரிக்கும். வழக்கமாக, ஒரு பீப்பாய் கச்சா எண்ணெய் சர்வதேச சந்தையில் 110 டொலர் முதல் 150 டொலர் வரை விலைக்கு விற்கப்படுகிறது. அதாவது, ரொக்கமாக வாங்கினால், 110 டொலர் முதல் 120 டொலர் வரை எண்ணெய்யைப் பெறலாம். ஆனால் நாம் கடன் வாங்கினால், ஒரு பீப்பாய் எண்ணெய் 150 டொலராக உயரும். ஒரு பீப்பாய் கச்சா எண்ணெய் எப்படியோ 300 டொலராக உயர்ந்தால், ஒரு லீற்றர் பெட்ரோலுக்கு குறைந்தபட்சம் ரூ.1,000 செலவாகும்

ஒரு லீற்றர் டீசலும் அதற்கு அருகில் விலைக்கு வரும். உலகில் உள்ள ஒவ்வொரு நாட்டின் பொருளாதாரமும் எரிபொருளில் இயங்குகிறது. எண்ணெய் விலை அதிகரித்தால், உலகப் பொருளாதார வழிமுறை அங்கேயே நின்றுவிடும். ஈரானின் ஆன்மீகத் தலைவர் அயதுல்லா அல்-கமேனியைக் கொல்ல வேண்டாம் என்ற டொனால்ட் ட்ரம்பின் வேண்டுகோள் மிக முக்கியமான கோரிக்கை என்று சொல்ல வேண்டும்.

அல்-கமேனியைத் தொட்டால், முழு ஈரானும் ஈரானை ஆதரிக்கும் அனைத்து நாடுகளும் தங்கள் கைகளில் கிடைக்கும் அனைத்தையும் கொண்டு வரும். இங்கிருந்து, ஒரு இரத்த ஏரி தொடங்குகிறது. அவர்கள் ஒவ்வொரு நாட்டிற்குள்ளும் நிறைய இரத்தம் சிந்துவார்கள்.

ஆயத்துல்லா அல்-கமேனி முகமதுவைப் போல, ஒரு நபி அல்ல, ஆனால், அவர் உலகெங்கும் மதிக்கும் ஆன்மீக தலைவராக நீண்டகாலமாக மக்கள் மனதில் இடம்பிடித்துள்ளார். அவர் மீது கையை வைப்பது. உலக முஸ்லிம்கள் வித்தியாசமான கண்ணோட்டத்திலேயே பார்ப்பார்கள்.




தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


# யாழ். தையிட்டி விகாரை அகற்றப்படாதென்பதே நிச்சயம்

**லக்ஸ்மன்**

'தையிட்டி' முடிவு இருக்கும் போதே போராட்டம் நடக்கின்ற விடயமாக இருந்து வருகிறது. அதாவது, கடந்த அரசாங்க ஆட்சிக் காலத்தில் இராணுவத்தினால் அமைக்கப்பட்ட திஸ்ஸ விகாரை என்கிற தையிட்டி விகாரை ஒருபோதும் இடித்து அழிக்கப்படப்போவதில்லை. வேறு இடத்துக்கு மாற்றப்படப் போவதுமில்லை. அவ்வாறிருக்கையில் விகாரை அமைக்கப்பட்டிருக்கும் காணியை விடுவிக்கும்படி போராட்டம் நடத்துவதே தேவையற்ற விடயமாகும் என்பதே யதார்த்தமானது.

கடந்த ஏப்ரல் மாத இறுதி வாரத்தில் கிளிநொச்சியில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களின் காணிகளில் இருந்து 'விடுவிக்கக்கூடிய' ஒவ்வொரு அங்குல காணியையும் மீள ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். அவருடைய பேச்சின் கருத்து என்னவென்று எல்லோருக்கும் புரிந்தாலும் அதற்கு விளக்கம் கொடுப்பதானால் விடுவிக்கக்கூடியவை என அவர்கள் நினைக்கும் அல்லது தீர்மானிக்கும் காணிகள் மாத்திரம்தான் விடுவிக்கப்படும் மற்றையவைகள் அல்ல என்பதாகவே இருக்கிறது.

இந்த நிலையில்தான், தையிட்டி விகாரைக்கு இராணுவத்தால் கைப்பற்றப்பட்ட காணிக்குப் பதிலாக 'மாற்றுக் காணி அல்லது இழப்பீடு' வழங்க அரசாங்கம் தீர்மானித்திருப்பதாகத் தகவல்கள் வெளிவந்திருக்கின்றன. விகாரை

அமைக்கப்பட்ட காணிக்கு உரிமை கோருவோர் தங்களுடைய காணிக்கு மாற்றுக்காணி கோரவும் இல்லை அதற்கு இழப்பீடு வழங்கும்படி அரசாங்கத்தைக் கேட்கவுமில்லை என்றிருக்கையில் இந்தவிதமான அறிவித்தலொன்று வெளிவந்திருக்கிறது. தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கான அலுவலகம் (ONUR), தையிட்டி விகாரை குறித்த அறிக்கையை நீதி அமைச்சரிடம் ஒப்படைத்ததையடுத்தே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

தையிட்டி விகாரை அமைக்கப்பட்டுள்ள காணியின் உரிமையாளர்கள் நடத்திவரும் காணி உரிமைக்கான போராட்டத்தின்போது, அரசாங்கத்தின் மாற்று காணி அல்லது இழப்பீட்டுத் திட்டத்தை முற்றிலுமாக நிராகரித்து, தங்கள் பரம்பரைக் காணியை தங்களிடம் மீள ஒப்படைக்க வேண்டுமென கோரிவருகின்றனர். ஜூன் 12ஆம் திகதி, வலிகாமம் வடக்கு பிரதேச செயலகத்தில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், தையிட்டி கிராமத்தில் அமைக்கப்பட்ட திஸ்ஸ விகாரையின் காணி தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினையைத்தீர்க்க, பௌத்த விகாரையை காணியில் இருந்து அகற்றுவதற்கான சாத்தியக்கூறு இல்லை.

விகாரைக்குரிய காணி ஒதுக்கப்படும். தமிழ் மக்களின் காணியில் விகாரை கட்டப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டால், மாற்றுக் காணி அல்லது இழப்பீடு வழங்கப்படும் எனத் தெரிவித்திருந்தார். அதே நேரம், "தையிட்டி பிரச்சினை இந்த பிரதேசத்தில் பெரிய ஒரு பிரச்சினை. தையிட்டி பிரச்சினைக்கு இந்த மாதத்திற்குள் தீர்வினை வழங்கத் தீர்மானித்துள்ளோம். ஏனென்றால், தையிட்டி விகாரையை உடைக்க ஏலுமா? ஏலாது?. அப்படியாயின் ஒன்று, விகாரைக்குரிய காணியை ஒதுக்கிவிட்டு, மிகுதிக் காணிகளை விடுவிப்பது. இந்த விடயம் அரச அதிபரிடம் ஒப்படைத்ததன் அடிப்படையில், பிரதேச செயலாளரிடம் ஒப்படைப்பார். பின்னர் போய் பாருங்கள் காணி இருக்கிறதா என்று, காணி இருக்கின்றவர்களுக்கு அதனைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்போம். மக்களின் காணிக்குள் விகாரை அமைந்திருந்தால் அதற்கு மாற்றுக் காணிகள் அல்லது நட்டஈடு வழங்க முடியும்" என்றும் தெரிவித்திருந்தார்.

அதன்படியே இந்த மாற்றுக்காணி அல்லது இழப்பீட்டுத் திட்டம் வெளிவந்திருக்கிறது என்பதே நிலைமை. 2023ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி தினத்தில் விகாரைக்கு அருகில் போராட்டம் நடத்திவரும் தமிழ் மக்கள், 16 தமிழ் குடும்பங்களுக்குச் சொந்தமான சுமார் 150 பரப்பு காணியை இராணுவம் வலுக்கட்டாயமாகக் கையகப்படுத்தி திஸ்ஸா விகாரையை அமைத்துள்ளதாகக் குற்றம் சாட்டிவருகின்றனர். விகாரை அமைக்கப்பட்ட காணிக்குரிய உரிமையைக் கோருவோரில் ஒருவரான வலிகாமம் வடக்கு பிரதேச சபை உறுப்பினர் பத்மநாதன் சாருஜன், அரசாங்கத்தின் இந்த மாற்றுக் காணி, இழப்பீட்டுத் தீர்மானத்தைக் கடுமையாக நிராகரித்திருக்கிறார்.

காணி உரிமையை உறுதிப்படுத்தும் மக்களுக்குக் காணி வழங்கப்படும் என, ஏப்ரல் முதல் வாரத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது நீதி அமைச்சர் உறுதியளித்த விடயத்தை, வலிகாமம் வடக்கு பிரதேச சபை உறுப்பினர் பத்மநாதன் சாருஜன் சுட்டிக்காட்டுகின்றார். திஸ்ஸ விகாரைக்கு காணி கையகப்படுத்தப்பட்டமை காரணமாகக் காணியை இழந்த அனைத்து குடும்பங்களும் கலந்துரையாடலின் போது, காணி மீதான தங்கள் உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணங்களையும் சமர்ப்பித்திருக்கிறோம். அமைச்சர் கூறியதை ஏற்றுக்கொள்ள முடியாது.

விகாரை அமைக்கப்பட்டுள்ள காணி மக்களுக்குச் சொந்தமானது என்பதை நாங்கள் உறுதிப்படுத்தினால், அது மக்களுக்கு வழங்கப்படும் என நீதி அமைச்சர் எங்களுக்கு உறுதியளித்தார். எங்களுக்கு எங்கள் காணி வேண்டும் என்றும்
பத்மநாதன் சாருஜன் கூறியிருக்கிறார்.

இந்த இடத்தில்தான், தமிழ் மக்களின் பாரம்பரிய காணி உரிமைகளுக்காகப் போராடும் மக்கள் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டியமைக்கு அமைய, திஸ்ஸ விகாரைக்காக கையகப்படுத்தப்பட்ட காணிகள் குறித்து கடற்றொழில் அமைச்சர் மற்றும் நீதி அமைச்சரின் கருத்துக்கள் முரண்படுகின்ற விடயம் கவனிக்கப்பட வேண்டும். இருந்தாலும், நடைபெறுவது தமிழ் மக்களுக்கு நன்மையாக இருக்கப்போவதில்லை என்பது மட்டுமே நிச்சயம்.

திஸ்ஸ விகாரை காணிப் பிரச்சினை தொடர்பான அனைத்து தரப்பினரையும் யாழ்ப்பாண நாக விகாரை சர்வதேச பௌத்த மையத்திற்கு வரவழைத்து ஏப்ரல் முதல் வாரத்தில் ஒரு மத்தியஸ்த நிகழ்ச்சியை நடத்தியதாக 2025 ஜூன் முதல் வாரத்தில் தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கான அலுவலகம் வெளியிட்ட ஊடக அறிக்கை ஒன்றில் தெரிவித்திருந்தது.

காங்கேசன்துறையில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க திஸ்ஸ விகாரையில் புனரமைக்கப்பட்ட ஸ்தூபி வைக்கும் பணி 2023ஆம் ஆண்டு ஏப்ரல் 27ஆம் திகதி அன்று இடம்பெற்றது என இலங்கை இராணுவம் ஏப்ரல் 29ஆம் திகதி தனது உத்தியோகபூர்வ இணையதளத்தில் செய்தி வெளியிட்டிருந்தது. கி.பி. 3ஆம் நூற்றாண்டில் தேவநம்பிய திஸ்ஸ மன்னன் காலத்தில் இந்த விகாரை அமைக்கப்பட்டது என இலங்கை இராணுவம் தெரிவிக்கின்றது.

இதற்கிடையில், பலாலி விமான நிலையத்திற்குத் தேவையான காணிக்கு மேலதிகமாக அந்தப் பகுதியில் இராணுவ முகாமை நடத்திச் செல்லவும் காணி அவசியம் என்பது ஜனாதிபதியின் நிலைப்பாடு என, ஜூன் 12ஆம் திகதி வலிகாமம் வடக்கு பிரதேச செயலகத்தில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்திருக்கிறார். எஞ்சிய காணியை விடுவிக்குமாறு ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க பாதுகாப்புத் தலைவர்களுக்கு அறிவித்ததாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியிருக்கிறார். அதே நேரத்தில், பாதுகாப்புத் தரப்பினருடன் நடைபெற்ற சந்திப்பில் ஜனாதிபதி பலாலி விமான நிலையம் வருவதனால் அத்தியாவசியமாக அந்த விமான நிலையத்திற்குத் தேவையான காணியைத் தவிர்த்து, அதனைவிட இந்த பிரதேசத்தில் ஏதோ ஒரு இராணுவ முகாம் இருக்கத் தானே வேண்டும். அந்த இராணுவ முகாம் தவிர்த்து மற்றைய காணிகள் அனைத்தையும் விடுவிக்குமாறு மிகத் தெளிவாகச் சொல்லியிருந்தார்.

அதனை நான் சொல்லவில்லை ஜனாதிபதி மிகவும் தெளிவாகப் பாதுகாப்பு செயலாளர் உள்ளிட்ட அனைவருக்கும் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்க அதிகாரிகளால் உறுதிப்படுத்தப்பட்டமைக்கமைய, பலாலியில் உள்ள யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத்திற்கும் தனியார் காணிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. பலாலியில் விமானப்படைத் தளத்தை விரிவுபடுத்துவதற்காக வலுக்கட்டாயமாகக் கையகப்படுத்தப்பட்ட தமிழ் மக்களுக்குச் சொந்தமான 1009.7 ஏக்கர் காணியை விமானப்படை ஏற்கெனவே ஓடுபாதைக்காகப் பயன்படுத்தி வருவதாக ஜனவரி 2025இல் ஜனாதிபதியிடம் தெரிவித்த யாழ். மாவட்டச் செயலாளர் மருதலிங்கம் பிரதீபன், அந்த காணியில் 643 தமிழர்களுக்குச் சொந்தமான காணிகள் இருப்பதாகக் கூறியிருந்தார். இவ்வாறிருக்கையில்தான், இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களின் காணிகளில் இருந்து விடுவிக்கக்கூடிய ஒவ்வொரு அங்குல காணியையும் மீள ஒப்படைக்க
நடவடிக்கை எடுக்கப்படும் ஆனால், தையிட்டி விகாரை அகற்றப்படாதிருக்கும் என்ற முடிவும் கிடைக்கும்.



## வாழ்வியல் தரிசனம்

கத்திப் பேசியே தங்களின் தவறான கருத்துகளைச் சரியானது என வாதிடுபவர்கள் பலருளர். அமைதியாகவும் இனிமையாகவும் பேசி தங்களின் கருத்துகளைக் கூறவேண்டும்.

பேசும்போது கூட, மிரட்டும் தொனியில் பேசுவது அநாகரிகமானது. அமைதியான மனிதர்கள் இத்தகையவர்களிடம் நட்புக் கொள்ளமாட்டார்கள்.

பொய்களைப் பேசுபவர்களுக்கு உண்மைகள் எதுவெனப் புரிந்தாலும், அதை ஒப்புக்கொள்ளவும் மாட்டார்கள். கருத்துச் சுதந்திரம் என்பது, கண்டபடி பேசுவதற்கானது அல்ல, சில அரசியல்வாதிகள் எப்படியும் பேசுவார்கள். அத்தகையவர்கள் கேலிக்குரியவர்களாகி விடுவர்.

சிலர் வதந்திகளைக் கேட்கப் பிரியப்படுவார்கள். அவர்கள், தங்களின் பொய்யான பேச்சுகளுடன் வதந்திகளையும் உள்நுழைத்து விடுவார்கள்.

நல்ல வார்த்தைகளுக்கு உயிருண்டு. பொய்களைப் புனைபவர் சமூகத்தில் நம்பிக்கை அற்றவர் ஆகின்றார். பொய், துன்பங்களைப் பிரசவிக்கிறது.

பேச்சுகள் மூலம் ஒருவரைக் காயப்படுத்துவது மகாபாவம். நல்ல நெஞ்சில் இருந்து, அழகான சொற்கள் உற்பத்தியாகின்றன.

– பருத்தியூர் பால.வயிரவநாதன்

## கடிதங்கள்

### கழிவுகளுக்கு தீ வைப்பதால் மக்கள் அவதி

மானிப்பாய் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட கல்லூண்டாய் பகுதியில் கழிவுப் பொருட்களை யாழ்ப்பாணம் மாநகர சபையினர் சேகரித்து வருகின்றனர்.

குறித்த கழிவு சேகரிக்கும் பகுதிக்கு தொடர்ச்சியாக தீ வைத்து வருவதால், வீதியால் செல்லும் பயணிகளும், பிரதேசவாசிகளும் பல்வேறு இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குப்பை மேட்டுக்கு தீ வைத்ததால் அதன் மூலம் வெளியான புகை வீதியெங்கும் பரவி வீதியால் செல்லும் மக்கள் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர்.

மாநகரசபையின் இவ்வாறான அநாகரீகமான செயற்பாடுகள் குறித்து பல தடவைகள் செய்திகள் வெளியாகிய போதும் அவர்கள் தொடர்ந்து இவ்வாறு செய்வது மக்களை பற்றிய அக்கறை இல்லாத தன்மையை எடுத்துக் காட்டுகின்றது என மக்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும், இது தொடர்பாக உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர்.

– பு.கஜிந்தன்



கொமர்ஷல் வங்கியின்

# பிரத்தியேக இஸ்லாமிய வங்கி சேவைப் பகுதி




கொமர்ஷல் வங்கி, ஷரியாவுக்கு இணக்கமான வங்கி தயாரிப்புகள் மற்றும் சேவைகளை நாடும் வாடிக்கையாளர்களின் வசதி கருதி புறக்கோட்டை பிரதான வீதியில் உள்ள அதன் கிளையில் ஒரு பிரத்தியேக இஸ்லாமிய வங்கி சேவைப் பகுதியை திறந்துள்ளது.

இது கொமர்ஷல் வங்கியால் அமைக்கப்படும் மூன்றாவது இஸ்லாமிய வங்கி;ச் சேவை நிலையமாகும். வங்கியின் இஸ்லாமிய வங்கிப் பிரிவின் பிரதான கிளையானது கொழும்பு 01இில் உள்ள கொமர்ஷல் வங்கியின் நகர அலுவலகக் கட்டிடத்தில் அமைந்துள்ளது, அதே வேளை மற்றுமொரு பிரத்தியேக இஸ்லாமிய வங்கி சேவைப்பகுதி மட்டக்களப்பில் உள்ள காத்தான்குடியில் உள்ள கிளையில் இயங்குகிறது.

இந்த சேவைப்பகுதிகளில், கணக்கு ஆரம்பித்தல், கடன் வசதிகள் மற்றும் வாடிக்கையாளர் சேவை உள்ளிட்ட பல்வேறு அத்தியாவசிய வங்கி சேவைகளை பெற்றுக் கொள்ள முடியும். மேலும், ஷரியாவுக்கு இணக்கமான வங்கி மற்றும் முதலீட்டு தயாரிப்புகளைத் தேடும் வாடிக்கையாளர்களின் மத நம்பிக்கைகளுக்கு இணங்க வடிவமைக்கப்பட்ட வங்கி தயாரிப்புகள் பற்றி நன்கு அறிந்த ஊழியர்களை கொண்டு இயங்குகின்றன.

கொமர்ஷல் வங்கியினால் அல் அதலா இஸ்லாமிய வங்கிச் சேவையின் கீழ் வழங்கப்படும் தயாரிப்புகளில் வாடியா யாத் தமான் நடைமுறைக் கணக்கு; முதரபா சேமிப்புக் கணக்கு, முதரபா முதலீடுகள், குறைந்து வரும் முஷாரகா, முராபஹா மற்றும் முசாவமா, இஜாரா குத்தகை மற்றும் இறக்குமதி நிதியுதவி ஆகியவை அடங்கும்.

இந்த தயாரிப்புகள் அனைத்தும் வங்கியின் ஷரியா சபையின் வழிகாட்டுதலின் கீழ் வழங்கப்படுவதுடன், இந்த சபையில் அனைத்து பரிவர்த்தனைகளும் ஷரியாவின் கொள்கைகளுக்கு மற்றும் அளவுருக்களுக்கு இணங்குவதை உறுதிசெய்யக்கூடிய இஸ்லாமிய நீதித்துறையின் சிறந்த நிபுணர்கள் உள்ளனர்.

உலகின் முதல் 1,000 வங்கிகளில் பட்டியலிடப்பட்ட இலங்கையின் முதலாவது வங்கியாக கொமர்ஷல் வங்கி திகழ்வதுடன் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் (CSE) வங்கித் துறையில் அதிக சந்தை மூலதனத்தைக் கொண்டுள்ளது. தனியார் துறையின் மிகப்பாரிய கடன் வழங்குநராக விளங்கும் கொமர்ஷல் வங்கி, SME துறையினருக்கு பாரியளவில் கடனுதவி வழங்கும் கடன் வழங்குநராகவும் உள்ளது. மேலும், டிஜிட்டல் புத்தாக்கங்களில் முன்னணியில் திகழும் இவ்வங்கி இலங்கையின் முதலாவது 100% கார்பன்-நடுநிலைமையை பேணும் வங்கியாகும்.

தர மேம்பாட்டு திட்டங்களுக்காக

# சியெட் களனிக்கு தங்க விருதுகள்




இல்வருடம் நடத்தப்பட்ட தர மேம்பாட்டுத் திட்டங்களுக்கான (QIPs) தேசிய தரம் மற்றும் உற்பத்தித்திறன் மாநாட்டில் (NCQP 2025) சியெட் களனி ஹோல்டிங்ஸ் ஆனது வியக்கத்தக்க வகையில் 17 தங்கப் பதக்கங்களை வென்றுள்ளது, இது 2024ஆம் ஆண்டிற்கான இதே நிகழ்வில் நிறுவனம் வென்ற தங்கப் பதக்கங்களின் எண்ணிக்கையை விட இரு மடங்கு அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக, சியெட் களனி இந்த ஆண்டு விருதுகளுக்காக சமர்ப்பித்த 17 திட்டங்களில் இரண்டு உற்பத்தி அல்லாத QIPகளின் முடிவுகளைச் சேர்த்து, இரண்டிற்கும் தங்கத்தை வென்றது. மேலதிகமாக, தேசிய மாநாட்டின் ஒரு பகுதியாக நடத்தப்பட்ட கைசன் (சிறந்ததற்கான மாற்றம்) போட்டியில் சியெட் குழு இரண்டு சிறப்பு விருதுகளைப் பெற்றது.

'செயற்பாட்டு தரங்களை மேம்படுத்துவதற்கும் செயல்திறனை மேம்படுத்துவதற்குமான எமது உறுதிப்பாட்டை இந்த விருதுகளை விட சிறப்பாக அங்கீகரிக்க முடியாது,' என்று சியெட் களனியின் பிரதம செயற்பாட்டு அதிகாரியான திரு. ஷமல் குணவர்தன தெரிவித்தார். 'சியெட் களனியானது ஒவ்வொரு மட்டத்திலும் உள்ள ஊழியர்களின் முழுமனதுடனான சிறப்பான பங்களிப்பின் மூலம், தரம் மற்றும் உற்பத்தித்திறன் மேம்பாட்டில் தொடர்ந்து அளவுகோல்களை நிர்ணயித்து வருவதுடன் தொழில்துறையில் சிறந்து விளங்குவதற்கான அதன் தலைமைத்துவத்தையும் அர்ப்பணிப்பையும் மேலும் வலுப்படுத்துகிறது என்பதையும் உறுதிப்படுத்துகிறது.'

உற்பத்தி அல்லாத இரண்டு திட்டங்களில் தங்க விருதை வென்ற முதலாவது திட்டமானது, நிறுவனம் முழுவதும் டிஜிட்டல் கற்றலை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் சியெட் களனியில் இணையத்தள கற்றலை ஏற்றுக்கொள்வது தொடர்பானது. இந்தப் பிரிவில் இரண்டாவது திட்டமானது விநியோகச் சங்கிலியில் ஏற்பட்ட இடையூறுகள் மற்றும் நீண்டகால பாதகமான காலநிலை காரணமாக அதிகரித்து வரும் மூலப்பொருட்களின் விலைகள் ஆகியவற்றிற்கு பதிலளிக்கும் வகையில் ஆரம்பிக்கப்பட்ட இயற்கை இறப்பர் தர மேம்பாட்டுத் திட்டமாகும்.

இதேவேளை 2025ஆம் ஆண்டில் இலங்கையில் சிறப்பாக முகாமைத்துவம் செய்யப்படும் டயர் உற்பத்தி நிறுவனமாக தொழில்சார் முகாமையாளர்கள் நிறுவனத்தால் (CPM) தேர்ந்தெடுக்கப்பட்ட சியெட் களனி ஹோல்டிங்ஸ், இலங்கையின் அதிக விருதுகளைப் பெற்ற டயர் உற்பத்தியாளராக தனது நாமத்தை பதிவு செய்துள்ளது. இதற்கிணங்க சியெட் களனி ஹோல்டிங்ஸ் நிறுவனமானது தேசிய வர்த்தக சிறப்பு விருதுகள் உட்பட ஏராளமான விருதுகள் மற்றும் சர்வதேச தர வட்டங்கள் மாநாட்டிலிருந்து பல்வேறு தர விருதுகளைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சட்ட மற்றும் செயல்பாட்டு இணக்கம் மற்றும் வலுவான விநியோகச் சங்கிலிக்கான பாதுகாப்பை அங்கீகரிக்கும் விதமாக, இலங்கை சுங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட பொருளாதார செயற்பாட்டாளர் (AEO) அடுக்கு ஐ அந்தஸ்தை சியெட் களனி பெற்றுள்ளது.

இலங்கையின் நியூமேடிக் டயர் தேவைகளில் பாதியை சியெட் களனி உற்பத்தி செய்கிறது. இறக்குமதி செய்யப்பட்ட டயர்களைச் சார்ந்திருப்பதைக் குறைப்பதன் மூலம் தேசிய பொருளாதாரம் அந்நியச் செலாவணியைச் சேமிக்க உதவுவதில் குறிப்பிடத்தக்க பங்கை வகிக்கிறது. மேலும், அதன் உற்பத்தியில் சுமார் 20 சதவீதத்தை 16 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றமை குறிப்பிடத்தக்கது.

வாழ்க்கை முறைகளில் ஏற்பட்ட மாற்றங்களும்

# தமிழ் பெண்கள் எதிர்நோக்கும் உள நெருக்கீடுகளும் தீர்வுகளும்



சி.சிவரஞ்சிதன்,
உளவளத்துணை பயிலுனர்,
தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் (NISD),
கிளிநொச்சி.

தமிழ்ச் சமூகத்தில் பெண்களின் பங்கு காலத்திற்குக்காலம் மாற்றமடைந்து வருகிறது. முன்பெல்லாம் கலாசாரம், பாரம்பரியம் எனும் பெயரிலும் மற்றும் மத அடிப்படையில் பெண்கள் வீட்டு வேலைகள் மற்றும் குடும்பப் பொறுப்புகளுக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டிருந்தனர். பெண்கள் வீட்டினை விட்டு வெளியே வருவதென்பதே அரிதான ஒன்றாக காணப்பட்டது. ஆனால், நவீனத் தொழில்நுட்பங்களின் அதீத வளர்ச்சி காரணமான நாடுகளுக்கிடையிலான தொடர்புகள் அதிகரித்து நாகரிகங்கள் வளர்ச்சியடைந்த இன்றைய சூழலில் கல்வி, தொழில், அரசியல், பொருளாதாரம் போன்ற பல துறைகளில் பெண்கள் பங்கு என்பது இன்றியமையாததாக மாறியுள்ளது. இந்த மாற்றங்கள் பல நன்மைகளைப் பெண்களுக்கும், குடும்பங்களுக்கும், நாட்டிற்கும் பெற்று தந்தாலும் பெண்கள் மத்தியில் புதிய உளப் பிரச்சினைகளையும் உள நெருக்கீடுகயையும் தோற்றுவித்துள்ளன. இக்கட்டுரையில் வாழ்க்கை முறைகளில் ஏற்பட்ட மாற்றங்களும் அதனால் தமிழ் பெண்கள் எதிர்கொள்ளும் உளவியல் சவால்கள் மற்றும் அவற்றுக்கான தீர்வுகள் பற்றி விரிவாக ஆராய்கின்றது.

## வாழ்க்கை முறையில் ஏற்பட்ட முக்கிய மாற்றங்கள்

முன்னைய காலத்தில் கல்வியியல் பெண்களின் ஈடுபாடென்பது மட்டுப்படுத்தப்பட்ட ஒன்றாக காணப்பட்டது. ஆனால், அந்நிலை மாற்றம் அடைந்து பட்டக் கல்வி மற்றும் தொழில்முறை கல்வி வரை பெண்களின் கல்வி நிலை உயர்வடைந்துள்ளது. இதன் காரணமாக மருத்துவத்துறை, பொறியியல்துறை, தகவல் தொடர்பாடல்துறை வரை பெண்களின் பங்களிப்பு உயர்வானதாக காணப்படுகின்றது. அத்துடன், பல பெண்கள் சுயமாக தொழில்களை ஆரம்பித்து தொழில் அதிபர்களாகவும் மிளிர்கின்றனர்.

பெண்கள் பொருளாதார நடவடிக்கையில் தங்களை இணைத்ததன் காரணமாக குடும்பம் மற்றும் தனிப்பட்ட வாழ்க்கை வேலை ஆகியவற்றுக்கிடையில் சமநிலையைப் பேணுவதில் சவால்களை எதிர்கொள்ளல், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முன்னேற்றம் காரணமாகத் தொலைக்காட்சி, சமூக ஊடகங்கள் மற்றும் ஒன்லைன் தளங்கள் ஆகியவற்றின் வளர்ச்சி பெண்களின் வாழ்க்கையில் புதிய சவால்களை ஏற்படுத்தியுள்ளன.

## நகர மயமாக்கம் மற்றும் தொழில் மயமாக்கத்தின் தாக்கம்

பெண்கள் தொழில் உலகத்திற்குள் நுழைந்ததன் காரணமாக நகரங்களிலேயே அதிக வேலைவாய்புக்கள் காணப்படுகின்றமையல் தொழில் வாய்ப்புக்களை நாடி பெண்கள் கிராமங்களில் இருந்து நகரங்களுக்கு நகர வேண்டிய கட்டாயத்திற்குள் தள்ளப்பட்டனர். அத்துடன், வேலைவாய்புத் தேடி வெளிநாடு செல்கின்ற நிலையும் காணப்படுகின்றது. இதன் விளைவாக, குடும்ப உறுப்பினர்களிடம் இருந்து விலகி புதிய சூழலில் தனிமையில் வாழ வேண்டியநிலை ஏற்படுகின்றது. இது அவர்களை மனஅழுத்தத்தை உண்டாக்கி மனச்சோர்வு அடைய வைக்கின்றது.

பெண்கள் கல்வி, தொழில் போன்ற துறைகளில் முன்னேற்றம் அடைந்தாலும், பால்நிலை அடிப்படையில் பெண்கள் ஒதுக்கப்படும் ஏதுநிலை தற்போதும் காணப்படுகின்றது. ஊதியம், பதவி உயர்வுகள், வேலைகளை ஒதுக்குதல், பொறுப்புக்களை வழங்குதல் போன்றவற்றில் பாரபட்சம் காட்டப்படுகின்றது. மேலும், வேலை சூழலில் பெண்கள் பாலியல் சுரண்டல்களுக்கும் உள்ளாக்கப்படும் ஏதுநிலைகளும் காணப்படுகின்றது.

இத்தகைய நடவடிக்கைகள் அவர்களை உளவியல் ரீதியாக பாதிப்படையச் செய்கினறது.

## மாற்றத்தின் விளைவு

நகர்ப்புற மயமாக்கம்- 60% தமிழ்ப் பெண்கள் வேலைத் தேடி நகரங்களுக்கு இடம்பெயர்ந்தனர் (இலங்கை மக்கள் தொகை கணக்கெடுப்பு 2021).

கல்வி வளர்ச்சி- 75% இளம் பெண்கள் உயர்நிலைக் கல்வியை முடித்தனர் (உலக வங்கி 2020).

தொழில் மாற்றங்கள்-30% பெண்கள் வெளிநாடுகளில் வேலை செய்கிறார்கள் (இலங்கை தொழிலாளர் துறை 2022).

தொழில்நுட்ப தாக்கம் 85% இளைஞர்கள் சமூக ஊடகங்களால் பாதிக்கப்பட்டுள்ளனர் (மன ஆரோக்கிய ஆய்வு 2023).

## குடும்ப அமைப்பில் ஏற்பட்டமாற்றங்கள்

### (கூட்டு குடும்பம், தனிக் குடும்பம்)

கூட்டு குடும்பமாக வாழ்ந்த முறை மாறி தனிக் குடும்பம் என்ற முறைக்குள் வாழ்க்கை முறை மாறியதன் காரணமான பெண்கள் அதிக வேலைப்பழுவை எதிர்கொள்ளவேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. இந்நிலை குடும்பமா? வேலையா? என்ற கேள்வியை ஏற்படுத்துவதோடு, குடும்பம் மற்றும் தொழில் இடையே சமநிலையில் (Work Live Balance) சிரமங்களை ஏற்படுத்துகின்றது. இதன் விளைவு அவர்களை மன அழுத்தத்திற்குள் தள்ளுகின்றது.

## உளப் பிரச்சினைகள்

அதிக வேலை அழுத்தம், போட்டியான சூழலில் நிரந்தரமாக வேலை செய்யும் அழுத்தம், பாலின சமத்துவமின்மை, சில இடங்களில் பெண்களுக்குக் குறைந்த ஊதியம் அல்லது பதவி உயர்வுகளில் பாரபட்சம், பாலியல் சுரண்டல்கள், குடும்பம் மற்றும் தொழில் இடையே சமநிலை, இரண்டையும் ஒருங்கிணைப்பதில் சிரமங்கள், குடும்பம் மற்றும் சமூகத்தின் அழுத்தங்கள், திருமணம் மற்றும் குழந்தை பராமரிப்பு பணிநிலை, பெண்களுக்குத் திருமணம் மற்றும் குழந்தை வளர்ப்பு பெரும் சவாலாக உள்ளது.

## சமூக எதிர்பார்ப்புகள்:

'பரிபூரண தாய் மற்றும் மனைவி' என்ற சமூக அழுத்தம், தொழில்நுட்ப முன்னேற்றம், மற்றும் சமூக ஊடகங்களின் தாக்கம் இதன் காரணமாக உடல் பிம்பம் குறித்த அழுத்தம் சமூக ஊடகங்களில் 'விழுமிய உடல் தோற்றம்' குறித்த அழுத்தம், ஒன்லைன் (Online) வன்முறைகள், இணையவழி துஷ்பிரயோகம் மற்றும் சமூகவலைத்தளங்களில் அவதூறுகளை எதிர்கொள்ளல் போன்றவற்றிற்கு ஆளாகி வருகின்றார்கள். கல்வி மற்றும் வாழ்க்கைத் தேர்வுகளில் ஏற்பட்ட மாற்றங்கள் மற்றும் தொழில் தேர்வுகளில் ஏற்பட்ட சுதந்திரம் பெண்கள் மருத்துவம், பொறியியல், தொழில் முயற்சியாளர் போன்ற பலதுறைகளைத் தேர்ந்தெடுக்கிறார்கள். இதன் காரணமாக திருமணம் தாமதப்படுத்தப்படுகிறது. இதன் விழைவு மன அழுத்தம் மனச்சோர்வு போன்ற உளப் பிரச்சினைகளுக்கு ஆளாகின்றனர். உழைப்பை சமூகமும் குடும்பமும் மதிக்காதபோது, தாழ்ந்த மதிப்புணர்வு உருவாதல் இதன் காரணமாக குடும்ப வன்முறைகள் உருவாகி சிலநேரங்களில் தற்கொலை எண்ணங்களாகவும் மாறுகிறது. மன அழுத்தம் காரணமாகத் தலைவலி, தூக்கமின்மை, மாதவிடாய் கோளாறுகள் போன்ற பிரச்சனைகளுக்கும் முகம் கொடுக்கின்றனர்.

## வேலையின்மை:

22% தமிழ்ப் பெண்கள் வேலையில்லா நிலையில் உள்ளனர். (இலங்கை புள்ளியல் துறை-2022).

## வெளிநாட்டு வேலை:

வெளிநாடு செல்லும் பெண்களில் 40% தனிமை மற்றும் மன அழுத்தத்தை அனுபவிக்கின்றனர்.

## குடும்ப அழுத்தம்:

65% பெண்கள் திருமணம் மற்றும் குழந்தை பராமரிப்பு காரணமாக மன அழுத்தத்தைச் சந்திக்கின்றனர்.

## பாலின பாகுபாடு:

வேலைத் தளங்களில் 30% பெண்கள் தகுதிக்குக் குறைவான ஊதியம் பெறுகிறார்கள்.

'PTSD' உள நோயால் போரால் பாதிக்கப்பட்ட 50% பெண்கள் இன்னும் எதிர்கொள்கின்றனர்.

உளப் பிரச்சினை விகிதங்கள் மனச்சோர்வு 45%, கவலைக் கோளாறு 38%, 'PTSD' (போர்-தொடர்பான) 25%, குடும்ப வன்முறை 20%, என்ற அடிப்படையில் பெண்கள் உள நெருக்கடிகளுக்கு ஆளாவதாக ஆய்வுகள் கூறுகின்றன.

## உளப் பிரச்சினைகளுக்கான தீர்வுகள்

### மன ஆரோக்கியம் குறித்த விழிப்புணர்வு நிகழ்வுகள்

இலங்கையை பொறுத்தவரை, தற்போது ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் உளவளத் துணையாளர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவர்கள் உளப் பிரச்சினைகளுக்கு உள்ளானவர்களுக்கான ஆற்றுப்படுத்தல்களை மேற்கொண்டு வருகின்றனர். எனினும், இவர்களது சேவை மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே நடைபெறுவதனை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இச்சேவையினை விரிவுபடுத்துவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மாலை வேளைகளில் கிராம அலுவலகர் ரீதியாக பெண்களை ஒன்று கூடவைத்து குழு உளவளத் துணையினை மேற்கொள்ளலாம். அத்துடன், குடும்ப உளவளத் துணையினையும் மேற்கொள்வதன் மூலம் பெண்கள் மத்தியில் காணப்படும் உளப் பிரச்சினைகள் தொடர்பாக விழிப்பூட்டல்களை ஏற்படுத்துவதன் ஊடாக பெண்களின் மன ஆரோக்கியத்தை மேம்படுத்தலாம்.

## சமூக ஆதரவு

பெண்களுக்கான சமூக வலைப் பின்னல்கள் மற்றும் குழுக்களை அமைத்து அதனூடாக பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை உரிய அமைப்புக்களுக்குக் கொண்டுசென்று தீர்வுகாணலாம். சமூகத்தின் மத்தியில் பெண்களின் முக்கியத்துவங்களை எடுத்துக்கூறி பெண்களின் உரிமைகளைப் பாதுகாத்தல், பாலின சமத்துவத்தை உறுதிசெய்தல், பெண்களை மதித்தல் போன்றவற்றை ஊக்கப்படுத்துவதன் மூலம் பெண்களுக்கு எதிரான வன்முறைகளைக் குறைக்கலாம்.

## அரச மற்றும் அசர சார்பற்ற நிறுவனங்ளின் ஆதரவு

பெண்களுக்கான திட்டங்களை உருவாக்கி அதன் மூலம் பெண்களுக்கான வேலைவாய்ப்புக்களை உயர்த்துதல், தொழில் முயற்சியாளர்களை உருவாக்குதல், பெண்களின் கல்வித் தரத்தினை மேலும், உயர்த்துதல், ஊதிய சமமின்மையை நீக்குதல், பெண்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் சைபர் குற்றங்கள், பாலியல் குற்றங்கள், வன்முறைகளில் இருந்து சட்டப் பாதுகாப்பு வழங்கல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

## குடும்ப ஆதரவு

பெண்களுக்கு குடும்ப ஆதரவு என்பது இன்றியமையாததாகும் பதிலளிக்காத உறவுகள் அல்லாமல் புரிந்து கொள்ளும் குடும்ப உறவுகள் பெண்கள் மனநிலையை வலுப்படுத்தும். அதனை ஊக்கப்படுத்தும் வகையில் குடும்பங்களின் நல்லுறவு ஏற்பட குடும்ப உன்வளத் துணையினை மேற்கொள்ளலாம்.

## சுய பராமரிப்பு நடைமுறைகள்

பெண்கள் தனக்கென நேரம் ஒதுக்கி, யோகா, தியானம், புத்தகங்களைவாசித்தல் போன்ற பயனுள்ள செயல்களில் ஈடுபடுதல். இது அவர்களின் மன ஆரோக்கியத்தை பாதுகாக்கும்.

SH அறிவுத்திறன்களை மேம்படுத்துதல்

மனநல கல்வி, தன்னம்பிக்கை வளர்ப்பு, பொது அறிவு வளர்ச்சி ஆகியவை பெண்களை மன ரீதியாக உறுதி செய்யும்.

## முடிவுரை

வாழ்க்கை முறைகளில் ஏற்பட்டமாற்றங்கள் பெண்களுக்குப் பலவாய்ப்புகளைத் தந்தாலும், புதிய உளவியல் சவால்களையும் உருவாக்கியுள்ளன. இந்த சிக்கல்களைத் தீர்க்க தனிப்பட்ட முயற்சிகள், குடும்ப ஆதரவு, சமூக மற்றும் அரசு நடவடிக்கைகள் தேவை. ஒரு சமத்துவமான, ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்க பெண்களின் மன ஆரோக்கியத்தை முன்னிலைப்படுத்த வேண்டும்.

ஈரான்

காமேனியின் பதவிக்கு

# மூவர் பரிந்துரை

இஸ்ரேல் தாக்குதலில் ஈரானில் சில விஞ்ஞானிகள் மற்றும் இராணுவ தலைவர்களும் கொல்லப்பட்ட சூழலில் காமேனி பதுங்கு குழியில் தஞ்சம் அடைந்துள்ளார்.

இந்த சூழலில் தனது உயிருக்கு ஆபத்து இருப்பதால் தனக்குப் பின் உயர் தலைவர் பதவிக்கு மூன்று மூத்த மதத் தலைவர்களின் பெயர்களை காமேனி பரிந்துரைத்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேலும், அந்த பட்டியலில்



அவரின் மகன் பெயர் இடம்பெறவில்லை.

கடந்த காலத்தில், மறைந்த ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி கமேனியின் வாரிசு என்று கூறப்பட்டது. ஆனால், ஹெலிகொப்டர் விபத்தில் அவர் இறந்தது அந்த ஊகத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தது.

இப்போது, காமெனியின் சொந்த மகன், திரைக்குப் பின்னால் ஒரு முக்கிய நபராகக் கருதப்படும் மோஜ்தபாவும் பட்டியலில் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஈரான்

அமெரிக்காவின் தாக்குதல்கள்:

# “பெரிய விளைவுகளை ஏற்படுத்தும்”

ஈரானின் அணுசக்தி தளங்கள் மீதான அமெரிக்காவின் தாக்குதல்கள் சர்வதேச சட்டத்தை மீறியுள்ளதாக, ஈரான் அணுசக்தி அமைப்பு தெரிவித்துள்ளது.

அமெரிக்க இராணுவம் ஈரானின் ஃபோர்டோ (Fordo), இஸ்ஃபஹான் (Isfahan) மற்றும் நடான்ஸ் (Natanz) அணுசக்தி தளங்கள் மீது தாக்குதல்களை நடத்தியதாக, அமெரிக்கா ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்திருந்தார்.

இத்தாக்குதல் ஞாயிற்றுக்கிழமை(22) அதிகாலையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த தாக்குதலை ஈரான் அணுசக்தி அமைப்பு உறுதிப்படுத்தியுள்ளது. இருப்பினும் சேதத்தின் அளவு குறித்து ஈரான் தெளிவுபடுத்தவில்லை.

இந்நிலையில், ஈரானிய அணுசக்தி அமைப்பு





வெளியிட்டுள்ள அறிக்கையில், “எதிரிகளின் தீய சதிகளுக்கு மத்தியிலும், ஆயிரக்கணக்கான புரட்சிகர விஞ்ஞானிகள் மற்றும் நிபுணர்களின் முயற்சிகளுடன், அணுசக்தி தியாகிகளின் இரத்தத்தின் விளைவாக கிடைத்த இந்த தேசியத் தொழிலின் (அணுசக்தி) வளர்ச்சியை நிறுத்த அனுமதிக்காது என்று மாபெரும் ஈரானிய தேசத்திற்கு உறுதியளிக்கிறோம்” என்று கூறப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் தாக்குதல்கள் பெரிய விளைவுகளை ஏற்படுத்தும் என்று ஈரானின் வெளியுறவு அமைச்சர் சையத் அப்பாஸ் அரக்சி எச்சரித்துள்ளார்.

மேலும், “ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு கவுன்சிலின் நிரந்தர உறுப்பினரான அமெரிக்கா, ஈரானின் அமைதியான அணுசக்தி நிலையங்களைத் தாக்குவதன் மூலம் ஐ.நா. சாசனம், சர்வதேச சட்டம் மற்றும் NPT ஆகியவற்றை கடுமையாக மீறியுள்ளது” என்று கூறிய அவர், ஐ.நா. சாசனத்தின் படி, தன்னை தர்க்கத்துக் கொள்ளும் உரிமை ஈரானுக்கு உள்ளது என்று தெரிவித்துள்ளார்.

அத்துடன், அமெரிக்கா நடத்திய வான்வழித் தாக்குதல்களை தொடர்ந்து, கதிர் வீச்சுக்கான எந்த அறிகுறியும் இல்லை என்று ஈரானின் அணுசக்தி அமைப்பு உறுதிப்படுத்தியதாக ஈரானிய அரசு ஊடக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இதனால் பொது மக்களுக்கு பாதிப்பு இருக்காது என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.



அமெரிக்கா

# அமெரிக்காவில் பாதுகாப்பு அதிகரிப்பு

இஸ்ரேல்-ஈரான் இடையிலான போரில் அமெரிக்கா தலையிட்டு தாக்குதல் நடத்தியிருப்பது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில், ஈரான் மீதான தாக்குதலை தொடர்ந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அமெரிக்க நகரங்களில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நியூயார்க் நகர பொலிஸார் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“நகரில் உள்ள முக்கிய இடங்கள், மத வழிபாட்டுத் தளங்கள், கலாசார மற்றும் தூதரக மையங்கள் உள்ளிட்ட இடங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. “இதேபோல, வொஷிங்டன், கொலம்பியா, லொஸ் ஏஞ்சல்ஸ் உள்ளிட்ட மாகாணங்களிலும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது” என தெரிவிக்கப்பட்டுள்ளது.


ஏமன்

அமெரிக்க கப்பல்களை

# ‘செங்கடலில் மூழ்கடிப்போம்’

இஸ்ரேலுடன் இணைந்து ஈரானை தாக்கினால், அமெரிக்க கப்பல்களை செங்கடலில் மூழ்கடிப்போம் என்று ஏமனின் ஹவுதிகள் எச்சரித்துள்ளனர்.

“ஈரானுக்கு எதிரான தாக்குதலில் அமெரிக்கா இஸ்ரேலுடன் இணைந்தால், ஹவுதி ஆயுதப் படைகள் செங்கடலில் உள்ள அமெரிக்க சரக்குக் கப்பல்கள் மற்றும் போர்க்கப்பல்களை குறிவைக்கும்” என்று ஹவுதி இராணுவ செய்தித் தொடர்பாளர் சஹ்யா சாரி கூறியுள்ளார்.




கர்நாடகா

# போலிச் செய்தி பரப்பினால் சிறை

கர்நாடகாவில் போலிச் செய்திகள், தவறான தகவல்களைப் பரப்பினால் 7 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கும் வகையில் புதிய சட்டம் கொண்டுவர அம்மாநில அரசு முடிவெடுத்துள்ளது.

அல்லது ரூ.10 இலட்சம் அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படும் என முன்மொழியப்பட்டுள்ளது.

மேலும், இந்தக் குற்றங்களில் ஈடுபடுவோர் பிணையில் வெளிவர முடியாத வகையில் கடுமையான சட்டப் பிரிவுகள் வகுக்கப்பட்டுள்ளன.





ஈரான் மீது இஸ்ரேல் தாக்குதல்

# “இந்தியா பொறுப்பை உணர வேண்டும்”

ஈரான் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வரும் விவகாரத்தில் இந்திய அரசு தனது பொறுப்பை உணர்ந்து செயல்பட வேண்டும் என காங்கிரஸ் முன்னாள் தலைவர் சோனியா காந்தி தெரிவித்துள்ளார்.

காசாவில் ஏற்பட்ட பேரழிவு குறித்தும், தற்போது ஈரானுக்கு எதிரான இஸ்ரேலின் தாக்குதல் குறித்தும் இந்திய அரசு அமைதி காப்பது நமது தார்மீக மற்றும் ராஜதந்திர வழக்கங்களை விட்டு விலகுவதற்குச் சமமாகும். இது நமது குரல் மட்டுமின்றி, நமது மதிப்புகளையும் இழப்பதைப் போன்றதாகும்.

இந்த விவகாரத்தில் இனி மேலும் தாமதிக்காமல் இந்தியா



தெளிவாகத் தனது கருத்தைத் தெரிவிக்க வேண்டும். இஸ்ரேல் விவகாரத்தில் இந்தியா தனது பொறுப்பை உணர்ந்து செயல்பட வேண்டும். மேற்கு ஆசியாவில் பதற்றத்தைத் தணித்து, பேச்சுவார்த்தையை ஊக்குவிக்க அனைத்து தூதரக வழிமுறைகளையும் பயன்படுத்த வேண்டும்.

இந்தியா- இஸ்ரேல் இடையிலான இருதரப்பு உறவு, போர் பதற்றத்தைத் தணித்து, அமைதிக்கு வழிவகை செய்ய உதவும் தார்மீக பொறுப்பை நமக்கு வழங்குகிறது. இது சாதாரண கொள்கை மட்டுமல்ல. இலட்சக்கணக்கான இந்திய மக்கள் மேற்கு ஆசியா முழுவதும் வேலை செய்கின்றனர். எனவே, அந்த பிராந்தியத்தில் அமைதி நிலவுவது நமது தேச நலன் சார்ந்த விடயமாகும் என சோனியா காந்தி தெரிவித்துள்ளார்.







தியாகிகள் கிண்ணத் தொடர்:

# சம்பியனானது மண்டூர்

வி.ரி.சகாதேவராஜா

மோகன் கணேஸ் ஞாபகார்த்த தியாகிகள் கிண்ண கால்பந்தாட்டத் தொடரில் மண்டூர் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

காரைதீவில் கிழக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எட்டு அணிகளுள் பங்குபற்றுதலுடன் நடைபெற்று வந்த இத்தொடரின் இறுதிப் போட்டியானது விபுலானந்தா மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றபோது புதிய வளத்தாப்பிட்டியைப் பிரதிநிதித்துவப்படுத்திய வீனஸ் விளையாட்டுக் கழகத்தை 2-1 என்ற கோல் கணக்கில் வென்றே மண்டூர் சம்பியனானது.



# யுனைட்டெட் செல்ல விரும்பும் மார்டினெஸ்

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டுக்கு இன்னொரு பிறீமியர் லீக் கழகமான அஸ்தன் வில்லாவின் கோல் காப்பாளர் எமி மார்டினெஸ் செல்ல விரும்புவதாகக் கூறப்படுகிறது.

யுனைட்டெட்டின் கோல் காப்பாளர் அன்ட்ரே ஒனானாவைக் கைச்சாத்திட பிரெஞ்சு லீக் 1 கழகமான மொனாக்கோ விரும்புகின்றமை குறிப்பிடத்தக்கது. எவ்வாறாயினும், 29 வயதான ஒனானா யுனைட்டெட்டிலேயே தொடர விரும்புகின்றார்.

ஜுவென்டஸைத் தவிர்த்து

# நாப்போலிக்கு செல்வதை முதன்மைப்படுத்தும் சஞ்சோ

இத்தாலிய சீரி ஏ கால்பந்தாட்டக் கழகமான ஜுவென்டஸைத் தாண்டி இன்னொரு சீரி ஏ கழகமான நாப்போலிக்குச் செல்வதை இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டின் முன்களவீரரான ஜடோான் சஞ்சோ முதன்மைப்படுத்துவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யுனைட்டெட்டுடனான தனது ஒப்பந்தத்தில் இன்னும் ஓராண்டை 25 வயதான சஞ்சோ கொண்டிருக்கிறார்.





இங்கிலாந்து எதிர் இந்தியா:

# முன்னிலைக்கு இரண்டு அணிகளும் போராட்டம்

இங்கிலாந்து, இந்திய அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்டில் முன்னிலைக்கு இரண்டு அணிகளும் போராடுகின்றன.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரில், லீட்ஸில் வெள்ளிக்கிழமை (20) ஆரம்பமான இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட இந்தியா, அணித்தலைவர் ஷுப்மன் கில்லின் 147, றிஷப் பண்டின் 134, யஷஸ்வி ஜைஸ்வாலின் 101, லோகேஷ் ராகுலின் 42 ஓட்டங்களோடு தமது முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 471 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் அணித்தலைவர் பென் ஸ்டோக்ஸ் 4, ஜொஷ் டொங்க் 4, பிறைடன் கார்ஸ் மற்றும் ஷொய்ப் பஷிர் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் இங்கிலாந்து, இரண்டாம் நாள் முடிவில் 3 விக்கெட்டுகளை இழந்து 209 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.





களத்தில் ஒலி போப் 100 ஓட்டங்களுடனும், ஹரி ப்றூக் ஓட்டமெதனையும் பெறாமலும் காணப்படுகின்றனர். முன்னதாக பென் டக்கெட் 62, ஜோ றூட் 28 ஓட்டங்களைப் பெற்றார். வீழ்த்தப்பட்ட 3 விக்கெட்டுகளையும் ஜஸ்பிரிட் பும்ரா வீழ்த்தியிருந்தார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 23, ஜூன் 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.